# போக்குவரத்துத் துறை

## மானியக் கோரிக்கை எண். 48

★★★★★★★★★

# இயக்கூர்திகள் சட்டங்கள் – நிருவாகம்

## மானியக் கோரிக்கை எண். 25

# அறிவிப்புகள்

## 2021 - 2022

**ஆர். எஸ். ராஜகண்ணப்பன்**

போக்குவரத்துத்துறை அமைச்சர்

# போக்குவரத்துத் துறை

## 1. தமிழ்நாட்டில், புதியதாக BS-VI குறியீட்டிற்கு இணக்கமான 2213 டீசல் பேருந்துகள் மற்றும் 500 மின்சார பேருந்துகள் கொள்முதல் செய்தல்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான பேருந்துகளை நவீனமயமாக்கும் பொருட்டு, ஜெர்மனி வங்கி (KfW) நிதி உதவியுடன், வயது முதிர்ந்த பழைய பேருந்துகளுக்குப் பதிலாக, புதியதாக BS-VI குறியீட்டிற்கு இணக்கமான 2213 டீசல் பேருந்துகள் மற்றும் காற்று மாசினை குறைப்பதற்காக 500 மின்சாரப் பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும்.

## 2. அரசு போக்குவரத்துக் கழகங்களின் கூடுதல் வருவாய்க்காக பெட்ரோல் / டீசல் சில்லரை விற்பனை நிலையங்கள் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான 10 இடங்களில் நிறுவுதல்.

அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு இயக்க வருவாயைத் தவிர கூடுதல் வருவாய்க்காக அரசு போக்குவரத்து கழகங்களுக்கு சொந்தமான 10 இடங்களில் பெட்ரோல் / டீசல் சில்லரை விற்பனை நிலையங்கள் அமைக்கப்படும். பொதுமக்களின் வரவேற்பினைப் பொறுத்து மேலும் பல இடங்களுக்கு நீட்டிக்கப்படும்.

## 3. அரசு போக்குவரத்து நிறுவனங்களின் கட்டடங்களின் கூரையில் சூரியசக்தி மின்னாற்றல் தகடுகள் நிறுவுதல்.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் உதவியுடன் அரசு போக்குவரத்துக் கழகங்களின் மின்சார செலவினை குறைப்பதற்காக, அவற்றிற்கு சொந்தமான பணிமனைகள் மற்றும் அலுவலகங்கள் போன்ற 12 இடங்களின் மேற்கூரையில் சூரியசக்தி மின்னாற்றல் தகடுகள் நிறுவப்படும்.

## 4. அரசு போக்குவரத்துக் கழகங்களிலுள்ள காலிப்பணியிடங்கள் நிரப்புதல்.

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

# இயக்கூர்திகள் சட்டங்கள் – நிருவாகம்

5. **பொதுமக்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு வராமலேயே பழகுநர் உரிமம், ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் மற்றும் ஓட்டுநர் உரிமத்தில் முகவரி மாற்றம் ஆகிய சேவைகளை பெறுதல்.**

ஆதார் அட்டையை அடையாள ஆவணமாக பயன்படுத்தி பொதுமக்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு நேரில் வராமலேயே (contactless service) போக்குவரத்து சேவைகளான பழகுநர் உரிமம், ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் மற்றும் ஓட்டுநர் உரிமத்தில் முகவரி மாற்றம் ஆகிய சேவைகள் வழங்குவது நடைமுறைப்படுத்தப்படும்.

6. திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் திருத்தணி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு (பகுதி அலுவலகம்) சொந்தக் கட்டடம் கட்டுதல்.

மதிப்பீடு ரூ.302.15 இலட்சம்

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் திருத்தணி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு (பகுதி அலுவலகம்) ரூ.302.15 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

7. **மதுரை மாவட்டம், மதுரை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் மற்றும் ஓட்டுநர் தேர்வு தளம் கட்டுதல்.**

**மதிப்பீடு ரூ.528.00 இலட்சம்**

பொதுமக்களுக்கு பல்வேறு வசதிகளுடன், ஓட்டுநர் தேர்வு தளத்துடன் கூடிய சொந்த கட்டடம் மதுரை மாவட்டம், மதுரை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ.528.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

**8. கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்.**

**மதிப்பீடு ரூ.498.00 இலட்சம்**

பொதுமக்களுக்கு பல்வேறு வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடம், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ.498.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

9. போக்குவரத்து துறையில் பணிபுரியும் முதன்மைக்கணக்கு அலுவலர், கணக்கு அலுவலர், உதவி இயக்குநர் (உள் தணிக்கை) உதவி இயக்குநர் (புள்ளியியல்) மற்றும் அனைத்து சரக அலுவலகங்களில் பணிபுரியும் உதவி கணக்கு அலுவலர்கள் உட்தணிக்கைப் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு மடிக்கணினி மற்றும் தரவு அட்டைகள் ரூ. 17.92 இலட்சம் செலவில் வழங்குதல்.

மதிப்பீடு ரூ.17.92 இலட்சம்

போக்குவரத்து துறையில் உட்தணிக்கை பணிகளை மேற்கொண்டு வரும் தணிக்கை அலுவலர்கள் தணிக்கை பணியினை மேற்கொள்ளவும் வாகன் மற்றும் சாரதி இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யவும் ஏதுவாக 16 மடிக்கணினிகள் அதற்கான இணைய இணைப்பு வழங்கும் தரவு அட்டைகள் (Data Card) ரூ. 17. 92 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

10. அனைத்து சரக அலுவலகங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளுக்கு புதிய கணினிகள், அச்சுப்பொறிகள் ரூ.291.90 இலட்சம் செலவில் வழங்குதல்.

மதிப்பீடு ரூ.291.90 இலட்சம்

போக்குவரத்து துறையில் கணினி பயன்படுத்தும் நிலையில் (பதிவுறு எழுத்தர், அலுவலக உதவியாளர், காவலர் மற்றும் ஓட்டுநர் தவிர) 1583 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். ஏற்கனவே 504 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து சோதனை சாவடிகளின் பணிகளும் ஆன்லைன் செய்ய இருப்பதாலும் தற்போதைய தொழில் நுட்பத்தினை கருத்தில் கொண்டும் மீதமுள்ள பணியாளர்களுக்கும் கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள் ரூ.291.90 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**ஆர். எஸ். ராஜகண்ணப்பன்**

போக்குவரத்துத்துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 1.